ORIGINAL ARTICLE

# பாரதியார் கவிதைகளில் யாப்பியல் [PĀRATIYĀR KAVITAIKAḶIL YĀPPIYAL]

# YAPIYAL IN BHARATIYAR POEMS

அ. சதீஷ் / A. Sathish *[1]

[1] Srimath Sivagnana Balaya Swamigal Tamil Arts and Science College Mailam, Tamilnadu, India.
Email: kanniyamsathish@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/137

**Abstract**

Bharathiar is one of the greatest poets of the twentieth century in the history of Tamil poetry for two Thousand years. Poetic personality plays a major role in Bhartiyar's pluralistic personality which led to the theoretical development of 'Bhartiyam'. Bharathiyar, who innovated in taste, substance, richness and words (simple style), has used various forms of Yappu to say Tamil Yappilakkanam in terms of form. In the twentieth century epic Bharathiyar poetry, 'Yapalumai' is embodied in various dimensions, such as manipulating various forms of Pa, Pavinam and music, performing Yapir innovations, making some flexibility and making new attempts. Bharati has made some innovations in Yapiyal by dealing with the traditional pa and pavinam forms like venpa etc. and the musical proof yap forms like vannam, sindhu, kirtanai etc. Bharathiar is also the author of poems on scene, power, air, sea, jagasithram and liberation. Bharati, who has followed the tradition and practiced various forms of sacrament, has also sown renewal poetry. These are the many forms of sacramental forms used by Bharatiyar.

**Key words:** Barathiyar, Yaappu, Venba, Aasiriyappa, Kalippa, Vanchippa, Pavinam, Sindhu, Keerthanai

**ஆய்வுச் சாரம்**

பாரதியார் இரண்டாயிரமாண்டு தமிழ்க்கவிதை வரலாற்றில் தம் கவிதையாளுமைத் திறத்தால் இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற மகாகவியாக விளங்கியவர். 'பாரதியியம்' என்ற கோட்பாட்டு உருவாக்கத்திற்குக் காரணமான பாரதியாரின் பன்முக ஆளுமையில் கவிதை ஆளுமையே பெரும்பங்கை வகிக்கின்றது. சுவையிலும் பொருளிலும் வளத்திலும் சொற்களிலும் (எளிய நடை) புதுமையைப் புகுத்திய பாரதியார், வடிவ அடிப்படையில் தமிழ் யாப்பிலக்கணங் கூறும் பல்வேறு யாப்பு வடிவங்களைப் பயன்படுத்தியுள்ளார். இருபதாம் நூற்றாண்டின் மகாகவியாக விளங்கிய பாரதியார் கவிதைகளில் யாப்பாளுமையானது பல்வேறு பா, பாவின, இசைப்பாடல்களின் வடிவங்களைக் கையாளுதல், யாப்பியற் புதுமைகளை நிகழ்த்துதல், சில

நெகிழ்வுத் தன்மைகளைச் செய்தல், புதிய முயற்சிகளையும் செய்தல் எனப் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டதாகத் திகழ்கிறது. வெண்பா முதலிய மரபான பா, பாவின வடிவங்களையும், வண்ணம், சிந்து, உருப்படி, கீர்த்தனை முதலான இசைநலம் சான்ற யாப்பு வடிவங்களையும் கையாண்டுள்ள பாரதி யாப்பியலில் சில புதுமையையும் படைத்துள்ளார். காட்சி, சக்தி, காற்று, கடல், ஜகசித்திரம், விடுதலை ஆகிய கவிதைகளை வசன கவிதையாகப் படைத்துப் புதுக்கவிதைக்கு வித்திட்டவராகவும் பாரதியார் திகழ்கின்றார். மரபைப் பின்பற்றி பல்வேறு யாப்பு வடிவங்களைக் கையாண்டுள்ள பாரதி புதுக்கவிதைக்கும் வித்திட்டுள்ளார். இப்படி பல பரிமாணங்களைக் கொண்ட பாரதியார் கையாண்டுள்ள யாப்பு வடிவங்களையும் பாரதியார் யாப்பியல் குறித்த முன்னைய ஆய்வுகளை திறத்தையும் ஆராய்ந்து மதிப்பிடுவதாக இக்கட்டுரை அமைகிறது.

**கருச்சொற்கள்:**பாரதியார், யாப்பு, வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, பாவினம், சிந்து, கீர்த்தனை.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 2nd April 2021, revised 20th April 2021, accepted 30th April 2021

**முன்னுரை**

நமக்குத் தொழில்கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதும் சோரா திருத்தல்

என முழங்கும் பாரதியார் இரண்டாயிரமாண்டு தமிழ்க்கவிதை வரலாற்றில் கவிதையாளுமைத் திறத்தால் இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற மகாகவியாக விளங்கியவர். 'பாரதியியம்' என்ற கோட்பாட்டு உருவாக்கத்திற்குக் காரணமான பாரதியாரின் பன்முக ஆளுமையில் கவிதை ஆளுமையே பெரும்பங்கை வகிக்கின்றது.

சுவைபுதிது பொருள்புதிது வளம்புதிது சொற்புதிது
சோதிமிக்க நவகவிதை

என்று தனது கவிதைத் தன்மை குறித்துச் சொல்கின்றார். சுவையிலும் பொருளிலும் வளத்திலும் சொற்களிலும் (எளிய நடை) புதுமையைப் புகுத்திய பாரதியார், வடிவ அடிப்படையில் தமிழ் யாப்பிலக்கணங் கூறும் பல்வேறு யாப்பு வடிவங்களைப் பயன்படுத்தியுள்ளார். அவற்றுள் சில மாறுதல்களையும் நெகிழ்ச்சிகளையும் புதிய முயற்சிகளையும் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 'சிந்துக்குத் தந்தை' எனப் பாவேந்தராலும் தமிழுலகாலும் போற்றப்படும் பாரதியாரின் யாப்பு ஆளுமையைத் தொகுத்து மதிப்பிடுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**பாரதி யாப்பாளுமை குறித்த ஆய்வுகள்**

பாரதியின் கவிதைத்தன்மை குறித்து ஆராய்ந்த பாரதி பாநிலை' என்ற நூலில் 'பாரதியின் யாப்பியல் அறிவு' என்னும் தலைப்பில் பாரதி யாப்பாளுமை குறித்து ஆராய்ந்துள்ளார் கா. மீனாட்சி சுந்தரம் அவர்கள். செங்கமலத்தாயார் என்பவர் 1983 -இல் 'பாரதி யாப்பு' என்னும் பொருண்மையில் 'ஆய்வியல் நிறைஞர்' பட்டத்திற்குரிய ஆய்வை நிகழ்த்தினார். அவர் மரபு தழுவல், மரபு மீறல், புதியன படைத்தல்' என்ற மூன்று நிலைகளில் தன் ஆய்வை

நிகழ்த்தியுள்ளார். 'தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் நூலில், சோ.ந. கந்தசாமி, இருபதாம் நாற்றாண்டு பாவியலை ஆராயும்போது பாரதி யாப்பியல் பற்றிக் குறிப்பிடுகின்றார். இரா. திருமுருகன் அவர்கள் 'பாவேந்தர் வழி பாரதி வழியா?' என்றும் நூலில் பாவேந்தர் யாப்புநெறியைப் பாரதியாருடன் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடாக வெளிவந்த 'பாரதி பாடல்கள் - ஆய்வுப்பதிப்பு' எனும் நூலில் ஒவ்வொரு பாடலின் யாப்பு வடிவத்தையும் பின்னிணைப்பாகச் சுட்டி, யாப்படிப்படையிலேயே சீர்பிரித்து பதிப்பிக்கப்பட்டுள்ளது. இரா. சம்பத் அவர்கள் 'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்மரபுக் கவிதை மரபும் நெகிழ்வும்' என்னும் நூலில் பாரதியார் யாப்பாளுமை குறித்து ஆராய்ந்துள்ளார். 'பாரதிதாசன் யாப்பியல்' பற்றி ஆராய்ந்த ய. மணிகண்டன் அவர்கள் பாரதி யாப்பியல்சார் செய்திகளையும் ஆங்காங்கே பதிவு செய்துள்ளார். இவற்றின் மூலம் தனிநிலையிலும் ஒப்பீட்டு நிலையிலும், பகுதி நிலையிலும் பாரதி யாப்பாளுமை குறித்த ஆய்வுகள் நிகழ்ந்துள்ளதை அறியமுடிகின்றன.

## பாரதி கையாண்ட பா வகைகள்

தமிழ் யாப்பியலின் மரபான பா வடிவங்கள் நான்கனுள் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா ஆகிய மூன்று வகைகளைக் கையாண்டுள்ளார். பாரதி யாப்பருங்கலக்காரிகை வகுத்த இலக்கணப்படி பாவகையையும் பாவின வகையையும் பாடியுள்ளார். அவற்றுள் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, மூன்றுமே பாரதியால் பாடப்பட்டுள்ளன. வஞ்சிப்பா பாரதியால் பாடப்பெறவில்லை என்பது புலனாகின்றது. (Sengamalathiyar. 1983)[1] என்ற 'செங்கமலத்தாயாரின் கருத்தும் இங்கு இணைத்துச் சுட்டத்தக்கது.

## வெண்பா

பாரதியார் வெண்பா வகைகளுள் 'நேரிசை வெண்பா', 'இன்னிசை வெண்பா' ஆகிய இரண்டு வடிவங்களிலும் கவிதை புனைந்துள்ளார். செங்கமலத்தாயார் (ஆய்வேடு), சோ.ந. கந்தசாமி (1.790, மு.மு), இரா. திருமுருகன் (ப. 7) போன்றோர் பாரதியார் இன்னிசை வெண்பா பாடியதாகக் குறிப்பிடவில்லை. தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பில் 'மேலோர் புகழ்' (ப.20), 'மணிமுத்து நாவலர்' (ப.850) ஆகிய இரண்டு தலைப்புகளில் அமைந்த பாடல்களும் இன்னிசை வெண்பாக்கள் என்ற குறிப்பு உள்ளது. ஆனால் மணிமுத்து நாவலர் என்ற தலைப்பின்கீழ்,

பந்தைத் தெறுமுலைமாப் பான்மொழியி னுங்கரிய
எந்தைக்குச் சால இனிக்குமே - விந்தை
அணிமுத்துக் கோவையென அஞ்சொலிசை சேர்க்கும்
மணிமுத்து நாவலர் வாக்கு (93)

என்ற நேரிசை வெண்பா உள்ளது. இப்பதிப்பை ஆதாரமாகக் கொண்ட இரா. சம்பத், பாடலைக் கண்ணுறாமல் பாரதியார் பாடிய இன்னிசை வெண்பாக்கள் இரண்டு என்று குறிப்பிடுகின்றார். கண்ணன் என் சேவகன், பாஞ்சாலி சபதத்தில் வரும் சில பாடல்கள் போன்றவற்றை வெண்கலிப்பாவின் ஒருவகை என்றோ, கலிவெண்பாவின் ஒருவகை என்றோ கொள்ளலாம் என்றார்(Kandasamy, 1989)[2]. ஆனால் இரா. திருமுருகன் அவர்கள், பாரதியார் பாடல்களில் பஃறொடை வெண்பாக்களையோ, கலிவெண்பாக்களையோ காணமுடியவில்லை. வெண்டளையில் ஆன நீண்ட பாடல்கள் இருப்பினும் அவையனைத்தும் வெண்பாவுக்குரிய சிந்தடியால் முடியவில்லை; அவை வெண்டளைக் கண்ணிகளில் அடக்கப்பட்டன (Thirumurugan,

1990)[3] என்கிறார். எனவே இவற்றின் மூலம் பாரதியார் வெண்டளையால் ஆன வேறுசில பாடல்களையும் பாடியுள்ளார் என்பதை அறியலாம்.

### ஆசிரியப்பா

ஆசிரியப்பா வகைகளுள் நிலைமண்டில ஆசிரியப்பா, நேரிசை ஆசிரியப்பா ஆகிய இரண்டு வகைகளைப் பாரதியார் கையாண்டுள்ளார். நிலைமண்டில ஆசிரியப்பாவில் 27 பாடல்களும், நேரிசை ஆசிரியப்பாவில் 11 பாடல்களும் (தமிழ்ப்பல்கலைக்கழகப் பதிப்பின்படி) பாடியுள்ளார். ஆனால் செங்கமலத்தாயார், நிலைமண்டில ஆசிரியப்பாவில் 17 பாடல்களும் நேரிசை ஆசிரியப்பாவில் 10 பாடல்களும் பாடியிருப்பதாகக் கூறுகின்றார். இவையல்லாமல் சிவாஜி தனது சைநியத்தாருக்குக் கூறியது (ப.[3]6), இருதலைக் கொள்ளியினிடையே (ப.809) ஆகிய இரு தலைப்புகளில் அமைந்த பாடல்கள் நிறைவுறாத ஆசிரியப்பாக்களாகக் கூறப்படுகின்றன.

### கலிப்பா

கலிப்பா வகைகளுள் ஒன்றான கொச்சகக் கலிப்பாவின் வகையான தரவு கொச்சகக்கலிப்பா என்ற யாப்பு வடிவிலும், கட்டளைக் கலிப்பா என்ற யாப்பு வடிவிலும் பாரதியார் பாடல்களைப் புனைந்துள்ளார். தரவுக்கொச்சகக் கலிப்பாவில் 13 பாடல்களைப் (பாரதி பாடல்கள், ப. 1185) பாடியுள்ளார்.

கட்டளைக் கலிப்பாக்கள் எண்சீர் கொண்ட நான்கடியாய், முதல் அரையடிக்கு நேரசையில் தொடங்குமாயின் ஒற்றினை நீக்கி 11 எழுத்துகளும் நிரையசையில் தொடங்குமாயின் ஒற்றினை நீக்கி 12 எழுத்துகளும் வரும். பாரதியார் இவ்வகையில் 112 பாடல்களைப் பாடியுள்ளார். இவையல்லாமல் 10-11, 11-12 என்ற எழுத்தெண்ணிக்கையுடைய கட்டளைக் கலிப்பாவையும் பாடியுள்ளார். இவ்விரு வகைகளும் புதியன என்பார் சோ.ந. கந்தசாமி (ப.794, மு.மு), ஆனால் இவற்றிற்கு யாப்பிலக்கண நூல்களில் முறையான விதிகள் இல்லை எனினும், இப்பாவகை இடைக்கால இலக்கியங்களில் பயின்று வந்துள்ளன என்பதும், அவற்றைப் பின்பற்றியே பாரதியாரும் பாடியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

> பாரதியார் பாடிய பா வடிவங்களும் கட்டளைக் கலிப்பாவே சிறப்பிடம் பெறுகின்றன. இவற்றிற்கு, பட்டினத்தார், தாயுமானவர், இராமலிங்க அடிகள், பாரதியார் முதலியோரால் போற்றி வளர்க்கப்பட்ட பொற்புமிகு வடிவமாக இது திகழ்கிறது. இந்த யாப்பு வடிவத்தை ஆள்வதில் பாரதியார் தனித்துத் திகழ்கின்றார். இவ்வடிவில் பாரதியார் படைத்த 'ஸவசரிசை' (கனவு) என்னும் குறும்படைப்பு உணர்ச்சிவேகமும் யாப்பு ஓட்டமும் கவித்துவமும் சிறக்க அமைந்து கட்டளைக் கலிப்பா யாப்புவடிவின் தனித்த கவினை வெளிப்படுத்துகின்றது (Manikandan, 2001)[4].

என்ற ய. மணிகண்டன் அவர்களின் கருத்து அரண் செய்வதாக உள்ளது. வஞ்சிப்பா யாப்பில் பாரதியார் பா புனையவில்லை. ஆத்திசூடியை நூற்பா யாப்பு வடிவத்தைப் பின்பற்றி பாடியுள்ளார் என்பதும் இவண்கண் குறிப்பிடத்தக்கது.

**பாவினங்கள்**

யாப்பியலின் வளர்ச்சிநிலையாக அறியப்பெறும் ஒவ்வொரு பாவிற்குமான தாழிசை, துறை, விருத்தம் ஆகிய மூன்றுவகை இனங்களைப் பயன்படுத்தி பாரதியார் பாடல்களை இயற்றியுள்ளார்.

**வெண்பா இனம்**

வெண்பா இன வகைகளுள் குறள் வெண்பாவின் இனமான குறள் வெண் செந்துறை என்ற யாப்புவடிவ அடிப்படையில் பாடல்கள் பாடியுள்ளார். இவ்வகையில் 557 பாடல்கள் (பாரதி பாடல்கள், ப.1185) பாடியுள்ளார்.

குறள் வெண்பாவின் மற்றொரு இனமான குறட்டாழிசை என்ற யாப்பு வடிவத்திலும் பாரதியார் பாடல்கள் பாடியிருப்பதாகச் 'செங்கமலத் தாயார்' குறிப்பிடுகின்றார். ஆனால் குறட்டாழிசையாக இவர் குறிப்பிடும் 'மஹாசக்தி' என்ற தலைப்பின் கீழ் உள்ள பாடலைக் 'கண்ணிகள்' (இசைப்பாடல்கள்) என்ற வகையுள் அடக்குகின்றது தமிழ்ப்பல்கலைக்கழகப் பதிப்பு (ப. 162). இவற்றை நோக்கும் போது பாரதி யாப்பாளுமை குறித்து ஆராய்ந்த ஆய்வாளர்களிடையே முரண்பாடுகள் இருப்பதை உணரலாம்.

**ஆசிரியப்பா இனம்**

ஆசிரியப்பா இனங்களுள் விருத்த வகையைச் சிறப்பான நிலையில் கையாண்டவர் பாரதியார். அறுசீர் (143 பாடல்கள்), எழுசீர் (37 பாடல்கள்), எண்சீர் (196 பாடல்கள்), பன்னிருசீர் (3 பாடல்கள்), பதின்மூன்றுசீர் (1 பாடல்), பதினான்குசீர் (1 பாடல்), பதினறுசீர் (1 பாடல்), இருபத்தறுசீர் (1 பாடல்) விருத்தங்கள் எனப் பல பாடல்களை விருத்த யாப்பில் பாடியுள்ளார்.

இவற்றுள் எழுசீர் (ஜயபாரத, ப. 103), பதின்மூன்றுசீர் (யாவரும் வருவீரே, ப. 851), பதினான்கு சீர் (மெலிவாகி நிற்றல் அழகோ? ப. 858), இருபத்தறுசீர் (செந்திரு தழுவிய பெருமாளே, ப. 859) போன்ற விருத்தயாப்பில் சந்தப் பாடல்களையும் புனைந்துள்ளார். இவ்விருத்த யாப்பைப் பயன்படுத்தி வண்ணங்களையும் படைத்துள்ளார். இதை,

> பாரதியார் கவிதைகள் வானவில் பிரசுரப் பதிப்பில் பாரதி திருப்புகழ், கண்ணன் மீது திருப்புகழ் என்ற தலைப்புகளில் மூன்று வண்ணப் பாடல்கள் காணப்படுகின்றன (Thirumurugan, 1990)[3]

என்ற இரா. திருமுருகன் அவர்களின் கூற்றாலும் அறியலாம். செங்கமலத்தாயார் இவ்வகையில் ஒரு பாடலை மட்டுமே பாடியுள்ளதாகக் கூறுவார்.

**கலிப்பா இனம்**

கலிப்பா இனத்தில் விருத்தம், துறை இரண்டையும் பாடியுள்ளார். துறையில் கலித்துறை, கட்டளைக் கலித்துறை ஆகிய இரண்டு வகைகளைப் பாடியுள்ளார். கலிவிருத்தத்தில் 17 பாடல்களையும் கலித்துறையில் 5 பாடல்களையும் கட்டளைக் கலித்துறையில் 12 பாடல்களையும் பாடியுள்ளார் (தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பின்படி). ஆனால் கலிவிருத்தத்தில்

24 பாடல்களையும், கட்டளைக் கலித்துறையில் 11 பாடல்களையும் பாடியிருப்பதாகக் குறிப்பிடுகின்றார் செங்கமலத்தாயார்.

## வஞ்சிப்பா இனம்

வஞ்சிப்பா வகையில் கவிதை எழுதாத பாரதியார் வஞ்சிப்பா இனமான வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம் ஆகிய இரண்டு யாப்பு வடிவங்களிலும் கவிதை புனைந்துள்ளர். வஞ்சித் துறையில் 12 பாடல்களும், வஞ்சி விருத்தத்தில் 1 பாடலும் (வந்தேமாதரம்-பல்லவி தவிர்த்து) பாடியுள்ளார்.

## பிற்கால யாப்பு வடிவங்கள்

மரபான யாப்பு வடிவங்களைத் தம் கவிதைகளில் திறம்படக் கையாண்ட பாரதியார் சித்தர் இலக்கியம் முதற்கொண்டு எழுந்த யாப்பு வடிவங்களான சிந்து, கீர்த்தனை, உருப்படி போன்றவற்றையும் திறம்பட கையாண்டுள்ளார்.

## சிந்துப்பாடல்கள்

சிந்துக்குத் தந்தையெனப் போற்றப்படும் பாரதியார், காவடிச்சிந்து, நொண்டிச்சிந்து, கும்மி, ஆனந்தக் களிப்பு, இரண்டடிச் சிந்து, நாலடிச்சிந்து ஆகிய சிந்து வகைகளைப் பாடியுள்ளார். பாரதியார் பாடவில்லை என்று இரா. திருமுருகன் குறிப்பிடும் தென்பாங்கு, இலாவணி (ப. 40) ஆகிய வடிவங்களைப் பாடியிருப்பதாகக் கூறுவார் செங்கமலத்தாயார் (Sengamalathiyar.1983)[1].

இவ்வகை சிந்துப் பாடல்களையே பாரதியார் அதிக அளவில் சிறப்பாகவும், திறம்படவும் கையாண்டுள்ளார். சிந்துப் பாடல்களை அதிக அளவில் பாடியமையை பாரதியார் பாடல்களின் அடிகள் ஏறக்குறைய 4000. அவற்றில் சிந்துகளும் உருப்படிகளும் ஏறக்குறைய 3000 அடிகள். இது மொத்தத்தில் 75 விழுக்காடு ஆகும்· (பாவேந்தர் வழி பாரதி வழியா? ப. 50) என்ற இரா.திருமுருகன் கூற்றாலும் பாரதி பாடிய சிந்துப்பாடல்களின் எண்ணிக்கை 794 என்ற குறிப்பிடும் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பாலும் உணரலாம். (Saravanathamizhan. T. 1995)[5]. கீர்த்தனை, உருப்படி கீர்த்தனை, உருப்படி போன்ற இசைப்பாடல் வகைகளிலும் பல்வேறு பாடல்களைப் பாடியுள்ளார். இவற்றுள்ளும் பல பாடல்கள் பாடும் போது தாமே இசையமைத்து இசையுடன் பாடிய பாடல்களாகும். பாரதியார் தம் பாடல்களில் 28 ராகங்களையும், 7 தாளங்களையும் பயன்படுத்தியுள்ளார் என்பார் செங்கமலத்தாயார் (பாரதியாப்பு-ஆய்வேடு). தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பு பாரதி பாடிய இசைப்பாடல்களாக 76-ஐக் (ப. 1186) குறிப்பிடுகின்றது.

## யாப்பியற் புதுமை

பாரதியின் ஒட்டுமொத்த யாப்பாளுமையை நோக்கும்போது யாப்பு அடிப்படைகளைப் போற்றியதுடன் அவற்றில் சில புதுமைகளையும் நிகழ்த்தியுள்ளார். சில யாப்பியல் நெகிழ்ச்சிகளையும் செய்துள்ளார்.

காட்சி, சக்தி, காற்று, கடல், ஜகசித்திரம், விடுதலை என்னும் ஆறு தலைப்புகளில் உள்ள பாடல்கள் வசன கவிதை தன்மை உடையன என்பார் செங்கமலத்தாயார். இவ்வகை பாடல்களுக்கு 'உரைப்பா' என்று இலக்கணம் வகுப்பார் த. சரவணத் தமிழனார்.

"சித்தர் பாடலால் சிந்து பழகிய
பாரதி காற்றாய் இயற்றிய உரைப்பா" (Thirumurugan, 1990)[3]

என்பது அவ்விலக்கணம். யாப்பியற் புதுமை எனலாமே அன்றி யாப்பு மீறல் என்று சொல்வது பொருந்தாது. இதை,

வசனகவிதைக்கும் யாப்பிலக்கணம் உண்டு அதிலும் மாவிளங்காய், தேமாங்கனி, எல்லாம் வந்தாக வேண்டும். வரும் வகை மட்டும் வேறாக இருக்கும். எதுகை, மோனை எல்லாம் உண்டு. (Thirumurugan, 1990)[3]

என்ற சி.சு. செல்லப்பா கூற்றாலும் அறியலாம்.

மேனாட்டு பா வடிவமான 'சானட்' என்ற வடிவத்தைப் பின்பற்றியும் கவிதை பாடியுள்ளார். இவ்வடிவம் தமிழ் யாப்பு வடிவமான ஆசிரியப்பாவோடு தொடர்புடையதாக விளங்குகின்றது. (K. Sarveswaran, G. Dias and M. Butt. 2018)[6] யான், சந்திரிகை, தனிமையிரக்கம் என்னும் மூன்று தலைப்புகளில் அமைந்த பாடல்களை இவ்வகையில் அடக்குவார் செங்கமலத்தாயார். ஆனால் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பு, முதல் இரண்டு பாடல்களை நிலைமண்டில ஆசிரியப்பாவாகவும் இறுதி பாடலை நேரிசை ஆசிரியப்பாவாகவும் கொள்கின்றது. ஆனால் இவை ஆசிரியப்பாவாக இருந்தாலும் அடி எண்ணிக்கையாலும், பொருண்மையாலும், தொடை நயத்தாலும் சானட் வடிவத்துடன் ஒத்துள்ளது. தனிமையிரக்கம் முதற்பாடலைக் குறிக்கும்போது "பதினான்கு அடிகளைக் கொண்டு எதுகை நயம் பொருந்தியதாய் அமைந்துள்ளது. எனவே சானட் வடிவத்துடன் ஒத்தது என்று செங்கமலத்தாயார் குறிப்பிடுவதும் இங்கு இணைத்தெண்ணத் தக்கது.

சிந்துப் பாடல்கள் இரண்டடியால் அமைவன. ஆனால் நான்கடிச் சிந்துப்பாடல்களைப் பாரதியார் பாடியதுடன் அவற்றை அதிக அளவிலும் கையாண்டுள்ளார். இவை யாப்பியலில் செய்த புதுமையாகும். இவற்றிற்கு இரா. திருமுருகனின், சிந்துகள் இரண்டு அடியின என்பதை முன்னர்க் கண்டோம். சிந்து பாடிய புலவர்கள் அனைவரும் இரண்டடிச் சிந்துகளே பாடியிருக்கின்றனர். ஆனால் பாரதியார் தாம்பாடிய காவடிச்சிந்து, நொண்டிச்சிந்து முதலியவற்றையும் மரபுக்கு மாறாக நான்கடிக் கண்ணிகளாகப் பாடியிருக்கின்றார்.

என்ற கூற்று அரண் செய்வனவாக உள்ளது. குயில்பாட்டில்,

காதல் காதல் காதல்
காதல் போயின் காதல் போயின்
சாதல் சாதல் சாதல்

எனத் தொடங்கி வரும் பாடல்கள் வடிவ அடிப்படையில் யாப்பியலில் செய்த புதுமையாகும். இவற்றை அம்மானை பாட்டு வடிவம் (ச.வே.சு) என்றும், ஒரு சொல் மூன்றுமுறை வருகின்ற வெண்பா அமைப்பு (கா. மீனாட்சி சுந்தரம்) என்றும், கலிவெண்பா அமைப்பு (சுந்தரராசன்) என்றும் கூறுவர். ஆயினும் அவற்றை வடிவ அடிப்படையில் செய்த யாப்பியற் புதுமுயற்சியாகக் கொள்ளலாம்.

**யாப்பியல் நெகிழ்வுத் தன்மை**

பல்வேறு யாப்பு வடிவங்களையும் போற்றி தம் கவிதைகளில் திறம்பட கையாண்ட பாரதியார் சில யாப்பில் நெகிழ்ச்சிகளையும் செய்துள்ளார். ஆசிரியப்பாக்கள். நெட்டுயிர் கொண்டு முடிய வேண்டும் என்ற இலக்கண வரையறையினைப் பாரதியார் பல இடங்களில் பின்பற்றவில்லை. அவற்றுக்கு மாறாக அம், உம், ஆர், ஏன், ஓம், ஆன் போன்ற ஈறுகளைக் கொண்டு முடியும் ஆசிரியப்பாக்களையும் பாடியுள்ளார். ஒரு சில இடங்களில் தொடை அமைப்புகளையும், ஒரு சில இடங்களில் புணர்ச்சி விதிகளையும் பேனவில்லை. இவற்றையெல்லாம் யாப்பியல் நெகிழ்வு தன்மைகளாகக் கொள்ளலாம்.

பாரதி யாப்பாய்வுகள் முரண்பாடுகளும் குறைபாடுகளும் பல்வகை பா, பாவின, இசைப்பாடல் வடிவங்களையும் கையாண்ட சீர்த்திமிகு கவிஞரான பாரதியார் யாப்பு ஆளுமையைக் குறித்துத் தனிநிலையிலும், ஒப்பீட்டு நிலையிலும் பகுதி நிலையிலும் ஆராய்ந்த அறிஞர்களிடையேயும் முரண்பாடுகளும் குறைபாடுகளும் காணப்படு கின்றன.

**பாரதி யாப்பாய்வில் உள்ள முரண்பாடுகள்**

பாரதியார், குறிப்பிட்ட ஒரு யாப்பு வடிவத்தைப் பின்பற்றிப் பா புனைந்துள்ளார் என்று ஒருசாராரும் புனையவில்லை என்று ஒருசாராரும் கூறுகின்றனர். உதாரணமாக, இன்னிசை வெண்பா யாப்பைப் பாரதியார் பயன்படுத்தவில்லை என்று செங்கமலத்தாயாரும் (பாரதியாப்பு-ஆய்வேடு), சோ.ந.கந்தசாமியும் (ப. 796 மு.மு.) கூற, தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பும் (ப. 1185), இரா. சம்பத்தும் (ப. 89) பயன்படுத்தியுள்ளார் எனக் குறிப்பிடுவதைக் கூறலாம். அதேபோல் இலாவணி பாடல்களைப் பாடவில்லை. இரா. திருமுருகனும் (ப. 40) பாடியுள்ளார் என்று செங்கமலத்தாயாரும் குறிப்பிடுகின்றனர்.

குறிப்பிட்ட ஒருவகை பாவடிவத்தில் பாரதி பாடிய பாடல்களின் எண்ணிக்கையைச் சுட்டுவதிலும் ஆய்வாளர்கள் வேறுபடுகின்றனர். பாரதி பாடிய நேரிசை வெண்பாக்களின் எண்ணிக்கையைச் சுட்டும்போது, 43 பாடல்கள் என்றும், 44 பாடல்கள் என்றும், செங்கமலத்தாயார் குறிப்பிட, சோ.ந. கந்தசாமி, தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பு மற்றும் இரா. சம்பத் 47 பாடல்கள் என்றும், குறிப்பிடுவது சுட்டத்தக்கது. இதேபோல் பாரதி பாடிய ஒட்டுமொத்த பாவடிவங்களின் எண்ணிக்கையைச் சுட்டும் போதும் (பாரதியார் பாடிய பாவடிவங்கள் மொத்தம்-29 இரா. திருமுருகன் (ப. 49), 23 - தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பு (ப. 1185-86) ஆய்வாளர்களிடையே முரண்பாடுகள் நிலவுகின்றன.

பாரதியார் பாடிய பாடல்களின் பா வடிவங்களைச் சுட்டுவதிலும் ஆய்வாளர்களிடையே முரண்பாடுகள் காணப்படுகின்றன. செங்கமலத்தாயார் 'சக்தி' என்ற தலைப்பின்கீழ் அமைந்த பாடலை 'வசன கவிதை' என்று குறிப்பிட, தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பு அவற்றைக் 'கட்டளைக் கலிப்பா' வகையுள் அடக்குவதை உதாரணமாகக் கொள்ளலாம். இவையல்லாமல் வேறுசில முரண்பாடுகளும் காணப்படுகின்றன

### பாரதி யாப்பாய்வில் உள்ள குறைபாடுகள்

பாரதியார் யாப்பு குறித்து ஆராய்ந்த ஆய்வாளர்களிடையே முரண்பாடுகள் காணப்படுவதைப் போன்று சில குறைபாடுகளும் உள்ளன. 'பாரதி யாப்பு' பற்றி ஆய்வு நிகழ்த்திய செங்கமலத்தாயார் மரபு மீறல் என்னும் மூன்றாவது தலைப்பில்,

வண்ணக்கிளி[1] வந்தே[2] மாதரமென் றோதுவரை
இன்னலறக் காப்பா ளியாறுரையாய் - நன்னர்செயத்
தான்போம் வழியெலாம் தன்மமொடு பொன்விளைக்கும்
வான் போந்த கங்கையென வாழ்த்து'

(1. ஒன்றா வஞ்சித்தளை; 2. நேரொன்றாசிரியத் தளை)

என்ற வெண்பாவைச் சுட்டிக்காட்டி பாரதியார் தளைப்பிறழப் பாடி மரபை மீறியுள்ளார் என்கின்றார். இவற்றிற்குக் காரணம் அப்பாடலை யாப்படிப்படையில் சீர்பிரித்து நோக்காததே.

யாப்படிப்படையில் சீர்பிரித்த அப்பாடல் வடிவம்,

வண்ணக் கிளிவந்தே மாதரமென் றோதுவரை
இன்னலறக் காப்பாளி யாறுரையாய் - ரன்னர் செயத்
தான்போம் வழியெலாந் தன்மமொடு பொன்விளைக்கும்
வான் போந்த கங்கையென வாழ்த்து

என்பதாகும். இப்பாடலின்படி அவர் தளைப் பிறழ்வதாகக் குறிப்பிடும் இடங்களில் இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் வருவதைக் காணலாம். மேலும்,

"இறுதியடியில் கங்கையென என்ற இரண்டாம்சீர் வாழ்த்து என்னும் இறுதிச் சீருடன் சேரும்போது கனிமுன் நேர்வரும் ஒன்றாத வஞ்சித்தளை வந்துள்ளது. இவ்வாறு வெண்பாவில் வேற்றுத்தளை வருதல் மரபு மீறலாகும்" Schiffman, H. (1998)[7]

என்று குறிப்பிடுகின்றார். ஐகாரம் மொழி இடையிலும் கடையிலும் வரின் அது குற்றெழுத்துப் போலவே ஒரு மாத்திரை பெறும் என்பது இலக்கண நூல்கள் கூறும் விதி. ஆனால் இவர் இறுதியடி இரண்டாம் சீரில் உள்ள 'ஐ'காரத்தை இரண்டு மாத்திரையாகக் கொண்டு கனிச்சீர் வந்துள்ளது என்கின்றார்.

தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பில் 'மணிமுத்து நாவலர்' என்ற தலைப்பின்கீழ் அமைந்த பாடல் இன்னிசை வெண்பா என்று பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அத்தலைப்பின்கீழ் நேரிசை வெண்பாவே உள்ளது. (நோக்குக, இக்கட்டுரையின் வெண்பா என்ற துணைத்தலைப்பை)

### நிறைவாக

இருபதாம் நூற்றாண்டின் மகாகவியாக விளங்கிய பாரதியார் கவிதைகளில் யாப்பாளுமையானது பல்வேறு பா, பாவின, இசைப்பாடல்களின் வடிவங்களைக் கையாளுதல், யாப்பியற் புதுமைகளை நிகழ்த்துதல், சில நெகிழ்வுத் தன்மைகளைச் செய்தல் எனப் பல்வேறு நிலைகளில் விரிந்து காணப்படுகின்றது. இவ்யாப்பாளுமை குறித்து பல நிலைகளிலும் ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. இவ்வாய்வுகளிடையேயும் சில முரண்பாடுகளும் குறைபாடுகளும் காணப்படுகின்றன.

இவையல்லாமல் பாரதி யாப்பாளுமை குறித்து ஆராய்வதற்கான விரிவான களம் உள்ளது. இவற்றிற்கு "யாப்பியல் நெறியிலும் சந்தி விதிகளும், சொல்லாட்சி முறையிலும் பாரதியாரின்

கொள்கைகளை விரிவாக ஆராய வளமாக இடம் இருக்கிறது"[12] என்ற கருத்தும் அரண் செய்வனவாக உள்ளது.

எனவே பாரதியார் பாடிய பாடல்களின் உண்மையான வடிவங்களைக் கண்டறிந்து அவற்றை முதன்மை ஆதாரமாகவும், அவர் யாப்பாய்வு குறித்து இதுவரை வெளிவந்துள்ள ஆய்வுகளைத் துணைமை ஆதாரமாகவும் கொண்டு, பாரதி யாப்பாளுமை குறித்து முழுமையான, நிலையான, நம்பக்கூடிய ஆய்வு பாரதியியம் என்ற கோட்பாடு உருவாகி இருக்கும் இக்காலக்கட்டத்தில் மிகத் தேவையான ஒன்றாகின்றது.

**மேற்கோள் நூல்கள்:**


1. Sengamalathiyar. (1983). *Pārati yāppu [Bharathiyars Prosody]*. Chennai: Ayviyal Niṟainar Paṭṭa Ayvēṭu.
2. Kandasamy. (1989). *Tamiḻ yāppiyaliṉ tōṟṟamum vaḷarcciyum mutaṟpākam - mutaṟpakuti, [Origin and development of Tamil prosody]*. Tajavur: Mutaṟpākam-Iraṇṭām Pakuti, Tamiḻp palkalaikkaḻakam.
3. Thirumurugan. (1990). *Pāvēntar vaḻi pārati vaḻiyā? [Does Bharathidasan followed the Bharathiyars Path]*. Chennai: Pārati Patippakam.
4. Manikandan. (2001). *Tamiḻil yāppilakkaṇa vaḷarcci, [Development of Tamil Prosody Grammar]*. Chennai: Viḻikaḷ Patippakam.
5. Saravanathamizhan. (1995). *Yāppunūl [Prosody]*. Chennai: Iyaṟṟamiḻ Payiṟṟakam.
6. Sarveswaran. K., Dias and Butt. (2018). "ThamizhiFST: A Morphological Analyser and Generator for Tamil Verbs," 3rd International Conference on Information Technology Research (ICITR), 2018, pp. 1-6, doi: 10.1109/ICITR.2018.8736139.
7. Schiffman. (1998). Standardization or Restandardization: The Case for "Standard" Spoken Tamil. Language in Society, 27(3), 359-385. Retrieved June 13, 2021, from http://www.jstor.org/stable/4168850